<u>07.10.2025</u>

<u>O.S.No.49/2012</u>

<u>பி.வா.சா.2.திரு.A.O.K. கருப்பணன், த.பெ.A.O. கருப்பணன்</u>

<u>சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்</u>

**<u>1, 2, 3, 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் கல்லம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கல்லம்பட்டி கிராமம் சர்வே எண்.318/28–ஆனது கிராம கணக்கின்படி சந்து என உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி மேற்படி சந்தை மறித்து காலேபிளாக் கல்லில் கட்டுமானம் கட்டியுள்ளார் என்றால் ஆமாம். வாதி ஆக்கிரமித்து கட்டியுள்ளதால் பொது மக்களுக்கு சிரமமாக இருக்கிறது என்றால் ஆமாம். தண்ணீர் செல்லவிடாமலும் கட்டியுள்ளார். இது சம்பந்தமாக வட்டார வளர்ச்சி அலுவலர் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுத்து வந்தார் என்றால் உத்தரவு போட்டுவிட்டார். வாதி ஆக்கிரமிப்பை அகற்றாமல் பொய்யான சங்கதியுடன் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். சந்து என்பது அரசுக்குப் பாத்தியப்பட்ட இடம் என்றால் ஆமாம். சந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மட்டும் உரிய இடம் என்றால் தண்ணீர் போகும் இடம் ஆகும்.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(திரு.பொ.மகாராஜன்.,M.L)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.